விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆவணி 19 ஜும்ஹரம் 9 இதழ் 189

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-9-1987

## 2ம் கட்டப் பேச்சு முடிந்தது

### இறுதிப் பேச்சுக்கள் கொழும்பில்

(புதுடில்லி)

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புதுடில்லியில் நடைபெறும் மகாநாட்டில் கலந்துகொண்டுள்ள இந்திய உயரதிகாரிகள் குழு, நேற்று விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளையும், கூட்டணிப் பிரதிநிதிகளையும் தனித் தனியாகச் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியது.

நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு பயனுள்ளதாக இச் சந்திப்பு அமைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகத்தின் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான பேச்சுக்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## 'ரெலோ' தாக்குதல் பற்றி விடுதலைப்புலிகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''இந்திய அமைதிகாக்கும் படையினருடன் சென்று கொண்டிக்கையில் 'ரெலோ' இயக்க உறுப்பினர்கள் எம்மை நோக்கிப்பாரிய ஆயுதங்கள் சகிதம் பெரும் தாக்குதலை மேற்கொண்டனர்'' என்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்

(5ம் பக்கம் பார்க்க)

# 17,000 இந்தியப் படையினர் ஈழத்தில் நிலைகொண்டுள்ளனர்!

(நமது வெளிநாட்டு செய்திப் பிரிவு)

**இலங்கையில் நிலை கொண்டிருக்கும் இந்திய அமைதிப் படையினரின் எண்ணிக்கை, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரங்களின்படி, பதினேழாயிரத்தைத் தாண்டிவிட்டதாக அறியப்படுகிறது.**

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள இந்திய அமைதிப்படையினரின் திட்டவட்டமான தொகை இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றுலும் இந்திய அதிகாரிகள் சுமார் ஆறுயிரம் இந்திய அமைதிப்படையினர் இங்கு நிலைகொண்டிருந்ததாகத் தெரிவித்தனர்.

அண்மையில் கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கைகளின்படி பதினேழாயிரம் இந்தியத் துருப்புக்கள் இலங்கையில் உள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

'மட்ராஸ் ரெஜிமன்ட்' பஞ்சாப் 'ரெஜிமென்ட்', 'மராட்டி ரெஜிமென்ட்' ஆகிய காலாட் படைப் பிரிவுகளிலிருந்து கணிசமான அளவினரும், மற்றும் இந்தியாவின் பல பீரங்கிப் படைப் பிரிவுகளிலிருந்தும் துருப்பினரும், அதிகாரிகளும் இங்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஆந்திரா பிரதேசத்திலுள்ள இந்தியப் படை முகாமொன்றிலிருந்து மட்டும் குறைந்தது ஏழாயிரம் படையினர் இங்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஆந்திர பிரதேச செய்திகள் கூறுகின்றன.

(5ம் பக்கம் பார்க்க)

அரசியல் கைதிகள் விபரங்களை

## யாழ் பல்கலைக்கழக மாணவர் குழு சேகரிக்கிறது

[யாழ்ப்பாணம்]

சிறைகளிலும் தடுப்புமுகாம்களிலும் இதுவரை விடுதலை செய்யப்படாது தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்காக யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சார்பில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குழுவின் செயலாளர் ஆசி பரந்தாமன் தலைமையிலான குழு ஒன்று இந்திய சமாதானப் படை உயர் அதிகாரிகளைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தது.

இதுதொடர்பாக இந்திய அமைதிப்படைத் தளபதியை மீண்டும் சந்திப்பதற்கு வசதியாக இதுவரை விடுதலைசெய்யப்பட்ட இன்னமும் சிறை

(5-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் துணை அமைச்சர் 11ல் யாழ் விஜயம்

[கொழும்பு]

பிரிட்டிஷ் உள்விவகாரதுணை அமைச்சர் இம்மாதம் பத்தாம் திகதி கொழும்பு வரவுள்ளார். மறுநாள் பதினொராம் திகதி இவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார்.

யாழ்ப்பாணம் வரும் அமைச்சர்; சிவில் இராணுவ அதிகாரிகள், இந்திய அமைதி காக்கும் படைப் பிரதிநிதிகள், மற்றும் தமிழ் பிரஜைகளைச் சந்திக்கவுள்ளார்.

(5 ம் பக்கம் பார்க்க)

## பன்றிவிரிச்சான் சம்பவத்தில் போராளி ஒருவர் மரணம்!

### புளொட் மீது புலிகள் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

''பன்றி விரிச்சானிலுள்ள எமது முகாம் 'புளொட்' உறுப்பினர்களால் தாக்கப்பட்டு எமது தோழர்கள் பலர் படுகாயமடைந்துடன் டென்சிலி என்னும் தோழர் வாளால் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்

(5-ம் பக்கம் பார்க்க)

## வளைகுடாவில் 'ஸார்ஜா, கப்பல் மீது ஈராக் ஏவுகணை தாக்குதல் இலங்கையர் இருவர் பலி!

லண்டன், செப் 3

வளைகுடாவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கொடியுடன் சென்றுகொண்டிருந்த 'ஸார்ஜா' நாட்டைச் சேர்ந்த எண்ணெய்க்கப்பலொன்று ஈராக்கிய ஏவுகணைத் தாக்குதலிற்குட்பட்டதில் இலங்கையர் இருவரும், ஐந்துபிலிப்பைன்ஸ் நாட்டினரும கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வளைகுடாவில் 'ஹார்க்' தீவில் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு இக்கப்பல் மீது ஈராக்கிய ஏவுகணைகள் பலத்த தாக்குதலை மேற்கொண்டதில் கப்பல் முற்ருக சேதமடைந்து மூழ்கடிக்கப்பட்டது. இதில் சென்ற இலங்கையர் இருவரும் பிலிப்பைனசை சேர்ந்த ஐவரும் கொல்லப்

(5ம் பக்கம் பார்க்க)

## 2,200 பேர் விடுதலையாம்

[கொழும்பு]

தென்பகுதி தடுப்பு முகாம்களிலிருந்து இதுவரை சுமார் 2 200 தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யபபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 600 தமிழ் இளைஞர்கள் அடுத்த வாரமளவில் விடுதலை செய்யப்படுவார்கள் [சி]

## முஸ்லிம் மக்களின் வீடுகள் பொலிஸாரினுல் தீக்கிரை

(மட்டக்களப்பு)

பொத்துவில் பாக்கியவத்தை என்னுமிடத்தில் முஸ்லிம் மக்களின் 3 வீடுகளை சிறிலங்காப் பொலிஸார் எரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முறையிட்

(5ம் பக்கம் பார்க்க)

## மூதூர் உதவி அரச அதிபர் படுகொலை!

(மூதூர்)

மூதூர் உதவி அரசாங்க அதிபர் ஜனுப் கபீத் முகம்மது நேற்றுமாலை படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

முஸ்லிம்-தமிழ் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும் நோக்கோடு இப்படுகொலை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில்; இப்படுகொலையை வன்மை

(5ம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் இடாப்பில் குடியேற்றமின்றி சிங்கள பெயர்கள்

(ஒட்டுசுட்டான்)

வவனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தமிழர்களின் குடியேற்றப்பகுதியான சூரியன் ஆறு என்ற இடத்திலிருந்து 1983ல் இராணுவ நடவடிக்கையால் மக்கள் வெளியேறிய பின்னர் கடந்த ஆண்டில் 1432சிங்களவர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் ஆட்கள் இல்லாமலே இந்தப்பதிவை செய்யும்படி பதிவுஉத்தியோகத்தருக்கு அரசு பணித்ததாகவும் அரசின் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த குறிப்பிட்ட உத்தியோகத்தர் மறுப்புத் தெரிவித்ததால் அவரை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்துவிட்டு வேறுஒரு உத்தியோகத்தர் அந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டு இப்பதிவுகள் பதியப்பட்டுள்ளதாகவும்

(5ம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் பதிவு வேலைகள்

[யாழ்ப்பாணம்]

வருடாவருடம் நடைபெறும் வாக்காளர்களைப் பதிவுசெய்யும் வேலை தற்போது யாழ். தேர்தல் கந்தோரில் நடைபெற்றுவருகிறது.

கடந்த ஜூன் மாதம்ஆரம்பமான இவ்வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது

அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் இவை உறுதிப்படுத்தப்படும் அதற்கு முன் நவம்பர் மாதத்தில் வாக்காளர் பட்டியல் பார்வைக்குவைக்கப்படும்.

## ஈழ. தே. ஜ. வி. முன்னணி குழுவும் இந்தியா சென்றது

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் அமைக்கப் படவுள்ள இடைக்கால அரசில் விடுதலை இயக்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பிரதிநிதித்துவம் தொடர்பாக இந்திய உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்காக ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் தூதுக்குழு ஒன்றும் இந்தியா சென்றுள்ளது.

திருவாளர்கள் மனேகரன், அமரன், ராஜா, ரகு ஆகியோ

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருமண பட்டுப்புடவைகள் காஞ்சிபுரம், ½X½, சில்க் அன்சிபோன், கொட்டன், காஞ்சிபுரம் போன்ற நவீன சேலை வகைகளை பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001
சி-0130

Bairaha farms பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள். புறொயிலர்குஞ்சுகள் 4ந் திகதி வெள்ளிக்கிழமையும் Hy- Line, Golden comet வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 9ந் திகதி புதன் கிழமையும் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில்.
(சி-0772)

வண்ணார்பண்ணையில்இருபுதிய வீடுகள் அமைதியான சுற்றுடல் எல்லாவற்றிற்கும் வசதியான இடம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: சி-0792 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-0792

1987 டிசம்பர் நடைபெறும் G. C. E. O/L தமிழ்மொழி பரீட்சை விசேடசித்திக்கான பயிற்சி நூல்: பகுதி I & II விடைக்குறிப்புகளுடன் வெளியீடு ஞானசுரபி புத்தக்கம்பனி, யாழ்ப்பாணம். சி-0797

2½ பரப்புக் காணி சகல வசதிகளுடன் உள்ள வீட்டுடன், புளியடிச் சந்தை ஒழுங்கை மானிப்பாய் தெறகில் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. தர்மராசா, புளியடிச்சந்தை ஒழுங்கை, மானிப்பாய்.
(சி- 0760)

ஆரம்பவிஞ்ஞானம் மதிப்பீட்டுபயிற்சிகள் ஆண்டு 4, 5, 6 New Class Work Book for English language Year 4, 5, 6, 7,8. வெளியீடு: ஞானசுரபி புத்தகக் கம்பனி, யாழ்ப்பாணம். சி-0796

அடைவுகடை நகைக்கடைகளுக்கு தேவையான பெரிய சைஸ் இரும்புப்பெட்டி [திண்டுக்கல்] 4 அடி 2½ அடி விற்பனைக்குண்டு. கணேசன் ஸ்ரோர்ஸ், 63, கே. கே. எஸ். வீதி, யாழ்நகர். [சி 0807]

சண்டிலிப்பாய்தெற்குகமலா பேக்கரிக்கு அருகாமையில் உள்ள மில்லேனில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பொன்னையா- சிறிபாலசிங்கம், மாசியப்பிட்டி- சண்டிலிப்பாய். (சி- 0799)

4, 5, 6 திகதிகளில் குஞ்சு விநியோகம். Hi-Line கறுப்பு வெள்ளை பேடு புறொயிலர், கறுப்பு புள்ளி வெள்ளை சேவல், Bairaha Farms Hi-Sex பேடு புறொயிலர் சிகப்பு சேவல், Cri-stambo புறொயிலர் சிகப்பு சேவல், முட்டை மொத்த விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. விஞேத் போட்டோ, 45, புங்கன்குளம் றோட், யாழ்ப்பாணம். பிரியா ஏஜென்சி, 21, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி. [சி 0847]

புதிய பழைய ஓடுகள் முதிரை நிலை கதவுகள், வீட்டுத் தளபாடங்கள், லவ் பேட்ஸ் கூட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சுகலஷ்மி கட்டிட பொருள்கள் விற்பனை நிலையம், மாட்டீன் றோட், யாழ்ப்பாணம். [சி 0844]

தர்மவாரம் படிவம் விற்பனைக்குண்டு. பாடசாலை மாணவர் தொடர்பு கொள்ளவும். நியூஸ் பிறிண்ட் தாளின் விலை சதம் 15 வெள்ளைத் தாளின் விலை சதம் 20. செட்டியார் அசசகம், 428, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். சி-2169

## விற்பனைக்கு

யாழ். பருத்தித்துறை வீதியில் நெல்லியடி சந்திக்கு அண்மையிலுள்ள நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 4 பரப்பு வீடு கட்டக்கூடிய நிலையிலுள்ள தோட்டக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்க: திருமதி மகேஸ்வரி வேலுப்பிள்ளை, 'பண்டித வாசா' பழைய ஆஸ்பத்திரிவீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
[சி 0810]

## வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனைகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ள கனகசபை தர்மகுலசிங்கம், கருங்காலி, காரைநகர். 190/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சி–0723

## தேவை

மின்சார உபகரணங்கள் விற்பனை செய்வதில் அனுபவமுள்ளவர் ஒருவர் தேவை மானிப்பாய்/ சுன்னுகம் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. வசந்தி எலெக்ரிக்கல்ஸ், 110, கே. கே. எஸ். வீதி, (பழைய பொலிஸ் ஸ்ரேசன் முன்பாக) சுன்னுகம்.
(சி- 0789)

எலெக்றிக் வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை. உடன் நேரில் வரவும் Balan Iron Works, 409, K, K. S. Road, வண்ணார்பண்ணை-
(சி- 0816)

மின்தறியில் அனுபவமுள்ள (இயக்குநர்கள்) பெண்கள் தேவைப்படுகிறுர்கள். தகுதி உள்ளவர்கள் நேரில் வரவும் கணேசன் ரெக்ஸ்ரைல் மில்ஸ், தாவடி வடக்கு கொக்குவில்.
(சி 0735)

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் மெல்லிசைக் குழுவுக்கு Organ, Drumb நன்கு வாசிக்கக்கூடியவர்கள் தேவை. இசைக்கருவி சொந்தமாய் வைத்திருப்பவர் விரும்பத்தக்கது. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். வயது, விலாசத்துடன் விண்ணப்பிக்கவும். விள. இல. சி-0778 மே/பா., ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
[சி-0778]

1 வயறிங்வேலை தெரிந்தவர் 2. மோட்டார் வைண்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில் வரவும். ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சி-0790

பெண் லிகிதர் தேவை. O/L சித்தியடைந்திருக்கவேண்டும் 07-09-87 ல் நேரில் வரவும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் முன்பு. சி-0858

நெல்லியடி வர்த்தக சங்கப் பகுதிக்கு இரவு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை முன்பு இத்தொழில் செய்தவர்கள் சான்றிதழ்களுடன் எதிர்பார்க்கும் ஊதியத்தையும் குறிப்பிட்டு உடன் விண்ணப்பிக்கவும். நெல்லியடி வர்த்தக சங்கம், மே/பா Engineering Contracts, நெல்லியடி, கரவெட்டி. சி-0851

இரும்புக்கடையில் பில் கிளாக்காக கடமையாற்றுவதற்கு ஆங்கில அறிவுள்ள பெண் ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 0809. மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி 0809]

## மணப்பந்தல்

சைவ உயர் வேளாளகுல சைவ போசனம் உண்ணும் 30 வயதுடைய B. A. பட்டதாரி ஆசிரியைக்கு சைவ போசனம் உண்ணும் அதே இனத்தைச் சேர்ந்த எஞ்சினியர், டாக்டர் அல்லது அரச உயர்பதவி வகிக்கும் மணமகன் தேவை தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ஐங்கரன் ஸ்ரோர்ஸ். இணுவில் மேற்கு, இணுவில்
[சி 0829]

## கல்வி

பாலராசிரியர் பயிற்சி புதிய வகுப்பு விரைவில் ஆரம்பமாகின்றது. க. பொ. த (சா/ த) குறைந்த தகமையாகும். சனி, ஞாயிறு தினங்களில் வகுப்பு நடைபெறும். நேரில் சமுகமளித்துக் கற்க முடியாதோர் தபால் வழியும் பயிலலாம்: பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-0820)

## பயிற்சி

வெல்டிங்-வயறிங், மோட்டார் மெக்கானிசம் (செய்முறை-அறிமுறையுடன்) சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கேற்ற துரிதகாலப் பயிற்சிகள் ஆரம்பம் 7–9-87, தொடர்பு;- யாழ்ப்பாணக் கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் முன்பு [35 வருடகால சேவை நிறுவனம்]
சி0856

## வகுப்புக்கள்

20-09-87 நடைபெறவிருக்கும் யாழ் சர்வகலாசாலை கொம்பியூட்டர் பயிற்சி நுழைவுப் பயிற்சிக்கான உளச்சார்புப் பரீட்சைவகுப்புக்கள் 31-08-87 காலை 9-00 மணி தொடக்கம் தினமும் நடைபெறும். Science Centre, Karaveddy.
சி-0677

1988-1989-A/L கலை, வர்த்தக வகுப்புக்கள் இன்றைய முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். ஆரம்பம் 07-09-87 விபரங்கட்கு: யாழ்ப்பாணக் கல்வி நிலையம்.
சி-0857

## சேவை

காலை முதல் மாலைவரை தங்களுடைய சகல பத்திரங்களையும உடனுக்குடன் போட்டோஸ்ரற் செய்துகொள்ள நாடுங்கள். மச்மிலன் புத்தகசாலை, No-3 பஸ் நிலையம், ஆஸ்பத்துரி வீதி, யாழ்ப்பாணம.
சி-0752

Roneo Works றேணியோ வேலைகள் சிறந்த முறையில் செய்து புத்தகங்களாகவும் கட்டிக் கொடுக்கப்படும். தமிழ், ஆங்கில, தட்டச்சு வேலைகள் செய்து கொள்ள: 536/1, K. K. S. வீதி. [புனிதா பில்டிங்] நாவலர் சந்தியருகாமை, யாழ்ப்பாணம். சி-0848

இந்தியாவிலிருந்து வெளிவரும் தலைசிறந்த பத்திரிகைகளான குமுதம், ஆனந்தவிகடன், யூனியர்விகடன், கல்கி ராணி, ஜெமினிசினிமா, இதயம் பேசுகிறது, சாவி, துக்ளக், மங்கை, சுமங்கலி, கற்கண்டு, அம்புலிமாமா. மங்கையர் மலர், ஞானபூமி, மாலைமதி, Sportstar, FrontLine, கலைமகள், கோகுலம், குங்குமம் ஏனைய நாவல்கள் சஞ்சிகைகளுக்கான ஓடர்கள் மீண்டும் எங்களால் பதிவுசெய்யப்படுகின்றன. ஏனைய விபரங்கட்கு நேரில் தொடர்புகொள்க: மச்மிலன் புத்தகசாலை, No 3, பஸ்நிலையம், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். [சி 0812]

## தவறிவிட்டது

தெல்லிப்பழை வீமன்காமத்திற்கும், துர்க்கை அம்மன் கோவிலுக்குமிடையில் பவுண் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மனிதாபிமான அடிப்படையில் ஒப்படைக்கவும். P தேவசுந்தர், வீமன்காமம், தெல்லிப்பழை,
(சி-0853)

## முக்கிய அறிவித்தல்

### பருத்தித்துறை நகராட்சிமன்றம்

பருத்தித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குள் உள்ள வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள் முதலிய சகல கட்டடங்களையும் புதிதாக அமைக்கவோ, திருத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ இந்நகராட்சி மன்றத்தின் முன் அங்கீகாரம் பெற்றே செய்ய வேண்டுமென்று இத்தால தெரிவித்துக் கொள்கின்றேன்.

1978-ம் ஆண்டில் 41-ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் பருத்தித்துறை நகரத்தில் அமுலில் உள்ளது என்பதை அறியத் தருவதோடு, இதைமீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனவே இதனைத் தவிர்த்து இந்நகர அபிவிருத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்குமாறு பொது மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றேன்.

க. சண்முகநாதன்
தலைவருக்காக
செயலாளர்,
நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. (ஏ 2165)

## 3–வது வருட நினைவஞ்சலி



### திருமதி எலிசபெத் செல்லம்மா அரசரத்தினம்

மண்ணில்: 28-03-1906

விண்ணில்: 04-09-1984

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், இறைவன் யேசுவின் அழைப்பை ஏற்று விண்ணுலகம் சென்ற எங்கள் அன்புத் தாயாரின் ஆன்மா இறைவன் சந்நிதியில் சாந்தியடைய வேண்டுகிறோம். உங்களை என்றும் மறவாத:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

'ராணிஸ்ரான்'
புகையிரத நிலையவீதி,
மன்னார். [கி 0833]

## Registration of Plan drawers

URBAN COUNCIL, POINT PEDRO

Applications are invited by the Secretary Urban Council, Point Pedro for the registration of 'Draughtsman'

Applicants must posses one of the following Qualifications:

(a) Draughtsmanship course.

(b) Certificate obtained on Building Construction.

(c) N. C T. issued by a recognised Institution

Selected applicants will be issued with annual Licence on recovery of a sum Rs 250/- as Licence fees for the drawing of building plans, drawings etc within the jurisdiction of Point Pedro Urban Council.

Applicants should make their own applications with copies of their Educational and Technical Qualifications, to reach the Secretary, Urban Council. Point Pedro on or before 30 - 09 - 1987.

K. Shanmuganathan,
Secretary'
for Chairman.
Urban Council,
Point Pedro.

Urban Council Office,
Point Pedro. A–2164

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

வட்டுக்கோட்டை மேற்கு மூளாய் வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அருணுசலம் என்பவரது மரணசாதனமில்லாத மரணச் சொத்துக்கள் விடயத்தில்.
— காலஞ்சென்றவர்.

தத்துவம் 4031

வேலுப்பிள்ளை அருணுசலம் கைம்பெண் பரமேஸ்வரி, மூளாய் வீதி, வட்டுக்கோட்டைமேற்கு. இவர் தனது அற்றேணித் தத்துவகாரன் கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் சம்பர்தர் லேன், வட்டுக்கோட்டைமூலம் தோன்றுகின்றுர்.
— மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18 ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1987 ம் ஆண்டு ஆடி மாதம் 28 ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
க. நாகேந்திரன்,
பதிவாளருக்காக.

வரைந்தது
மா. தியாகராசா,
மனுதாரின் சட்டத்தரணி.
[சி 0830]

# வளைகுடாவில் ஒரே இரவில் ஐந்து கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல்

உலகச் செய்திகள்

லண்டன், செப் 3.

**வளைகுடா கடல் பகுதியில் என்றுமில்லாதவாறு ஒரே இரவில் ஐந்து எண்ணெய்த் தாங்கிக் கப்பல்கள் ஈரானிய படைகளால் தாக்கப்பட்டன. இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம் பெற்றது. தாக்கப்பட்ட கப்பல்கள் வெவ்வேறு நாடுகளைச்சேர்ந்தவை எனத் தெரிவிக்கப்பட்டது.**

ஈரானின் ரோந்துப்படகுகளும், கடற்படைக்கப்பல்களுமே இந்த தாக்குதலில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்கப்பட்ட ஐந்து கப்பல்களும் எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களாகும் இவை தென் கொரியா, ஜப்பான், கிரேக்கம் ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவையாகும்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இந்தாக்குதல் வளைகுடா கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட முதலாவது பெரும் இராணுவக் குறுக்கீடு என்று அறிவிக்கப்பட்டது.

ஈரான், ஈராக் யுத்தம் உக்கிரமடைந்துள்ளதையடுத்து இப்போரின்எதிரொலியாகவே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக மேலும் குறிப்பிடப்பட்டது.

## யுத்தம் தீவிரம்

இதேவேளை வளைகுடா யுத்தம் கடந்த சில தினங்களில் தீவிரமடைந்துள்ளது. ஈரானின் எண்ணெய்த்தளங்கள் சிலவற்றைத் தாக்கியிருப்பதாக ஈராக் அறிவித்துள்ளது.

ஈரான் தரப்பு அறிவிப்பு ஒன்றில் ஈராக்கின் கைத்தொழில் மற்றும் பொருளாதாரமையங்கள் ஈரானின் விமானங்கள், ராக்கெட்டுக்களால் தாக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது.

# விநியோகஸ்தர் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட குளிர்பான விநியோகஸ்தர்களுக்கான கூட்டமொன்று, இன்று காலை யாழ். செயலக உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது

இக்கூட்டத்திற்குச் சகல குளிர்பான விநியோகஸ்தர்களையும் தவறுது சமூகமளிக்குமாறு உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு கேட்டுள்ளார்.

(வா)

ஊரிக்காட்டில்

# மிதிவெடியில்சிக்கி ஒருவர் பலி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்தவர் மீண்டும் தனது வீட்டிற்கு சென்றபோது முற்றத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி பலியானுர்

ஊரிக்காடு சிவசுப்பிரமணியம் சோடா பாக்டரிகு அருகேயுள்ள ஒழுங்கையில் உள்ள தனது வீட்டிற்கு சென்ற சக்திவேல் என்பவர் முற்றத்தில் நடந்துசென்றபோது அங்கு வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்து ஸ்தலத்தில் பலியானுர்.

(7ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழரை பாதுகாப்புடன் அனுப்பக் கோரிக்கை

சென்னை, செப் 2

இலங்கை வன்செயல்கள் காரணமாக இந்தியாவில் அகதிகளாகப் பதிவுசெய்யாமல் தங்கியிருப்போரையும் அமைப்புக்களிலிருந்து ஒதுங்கி தனிமையில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழர்களையும் பாதுகாப்பாக அனுப்புவது சம்பந்தமாக ஒழுங்குகளைச்செய்து தருமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ அமிர்தலிங்கம் தமிழக அமைச்சர் திரு. எம்.இராமச்சந்திரனையும் மறுவாழ்வுத்துறை அதிகாரிகளையும் சந்தித்து கோரியுள்ளார்.

இச்சந்திப்பு கடந்த ஞாயிறு இடம்பெற்றது.

# பஞ்சாப்பில் துப்பாக்கி நபர் அடித்துக் கொலை

அமிர்தஸ்சரஸ், செப் 3.

பஞ்சாப்பில் அமிர்தஸ்சரஸ் மாவட்டத்தில் உள்ள பால் நய்லாடு என்ற இடத்தில் துப்பாக்கி நபர் ஒருவர் பொது மக்கள் சிலரால் அடித்துக் கொல்லப்பட்டார்.

வீடொன்றில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் மீது இரு பயங்கரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அக்குடும்பஸ்தர் அத்துப்பாக்கிப் பிரயோகத்திலிருந்தும் தப்பித் தம்மைச் சுட்ட இருவரையும் அயலவர்களின் உதவியுடன் துரததிச் சென்றுர்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட இருவரில் ஒருவர் பிடிபட்டார் மற்றயவர்ஓடித்தப்பினுர். இதனையடுத்து பிடிபட்டவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

இதேவேளை பஞ்சாப்பில் 14 பயங்கரவாதிகளும். அவர்களுக்குஅடைக்கலம் கொடுத்தவர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவக்கப்பட்டது.

# வி. பி. சிங் கூட்டத்தில் ஐந்து லட்சம் பேர்

சென்னை செப் 3

கடந்த சனிக்கிழமை காசியில் நடைபெற்ற முன்னுள் பாதுகாப்பு அமைச்சர் வி. பி சிங்கின் கூட்டத்திற்கு சுயார் ஐந்து லட்சம் மக்கள் திரண்டனர். இக்கூட்டம் முன்னர் ஒரு முறை ஜெயப்பிரகாஷ் நாராயணன்கலர்து கொண்ட கூட்டத்தை விட எண்ணிக்கையில் அதிகமாகும்.

இக்கூட்டத்தில் வி. பி. சிங்கிக்கு "ஜனநாயக்" என பட்டமளித்து கௌரவிக்கப்பட்டது. (கை)

வளைகுடாவில் யுத்த நிறுத்தம்

# அமெரிக்க கோரிக்கையை ஈராக் நிராகரித்தது

[பாக்தாத், செப். 02]

பாரசீக வளைகுடாவில் தொடரும் போரை நிறுத்துமாறு அமெரிக்கா விடுத்த கோரிக்கையை ஈராக் நிராகரித்ததுடன் தனது பலத்த தாக்குதலையும் ஈரான்மீது தீவிரப்படுத்தியுள்ளது

கடந்த 7வருடங்களாகநடைபெறும் இந்த யுத்தம் கடந்த சில மாதங்களாக வளைகுடாவில் வல்லரசு நடமாட்டங்களையடுத்து திசை திரும்பியிருந்தது இதன் மூலம் ஈரானுக்கெதிரான வெளிச் சக்திகளின் உணர்வுகள் பலமடைந்துவந்துள்ளன.

இதனை ஆட்சேபித்து வந்த ஈரான தனது தாக்குதல்களை ஈராக் மீது நடத்தியதையடுத்து மீண்டும் வளைகுடாவில் வல்லரசுகளைப் பொருட்படுத்தாது ஈரான்-ஈராக் யுத்தம் உச்சக்கட்டநிலையை அடைந்துள்ளது.

கடந்த சில தினங்களாக இடம்பெற்ற இந்த யுத்தத்தின் போது இருநாடுகளினதும் பல நகரங்களமீதும் வளைகுடாவில் கப்பல்கள்மீதும் விமான ஏவுகணைத் தாக்குதல்கள் இடம் பெற்று வருகிறன. இதனுல் சுமார் 2000 பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் அறிவிக்கப்படுகிறது வளைகுடாவில் செல்லும் அனைத்து நாட்டுக் கப்பல்களும் பலமான் தாக்குதலுக்குள்ளாகிவருகின்றன. இந்நிலையையடுத்து அமெரிக்கா ஈராக்கைப் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு வருமாறு கேட்டிருந்தது. இதனை நிராகரித்துள்ள ஈராக்கின் கடும் தாக்குதல் இப்பகுதியில் அதிகரித்துள்ளது. [சி]

# 'ஜக்குவார்' விமானம் நொருங்கி வீழ்ந்தது

(சென்னை)

இந்திய விமானப்படையைச் சேர்ந்த ஜக்குவார்' பயிற்சி விமானமொன்று உதகமண்டலத்தில் நொருங்கி வீழ்ந்ததில் விமானி 'விங் கமாண்டர்' அசோக் யாதவ் ஸ்தலத்திலேயே பலியானுர்.

ஒரேயொரு விமானியுடன் பயிற்சியிலீடுபட்ட இவ்விமானம்வானத்திலேயே நொருங்கி வீழ்ந்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

(சி)

# ஜெட்டாநகர் சுத்திகரிப்பில் இலங்கையர்

(றியாடில் இருந்து எம். சுபேந்திரன்

சவுதி அரேபியாவில் ஜெட்டா நகரப்பகுதி சுத்திகரிப்பு வேலைக்கென இலங்கையிலிருந்து எழுபது பேர்வரையில் இங்கு வந்து சேர்ந்தனர்.

ஜெட்டா நகரப்பகுதியிலுள்ள கம்பனி ஒன்றுக்குவந்து சேர்ந்த இவர்களுக்கு 350 றியால் மாதாந்த சம்பளத்துடன் இலவச உணவும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப கம்பனியில்இலங்கையைச் சேர்ந்தவர்கள் அதிகம்பேர் பணியாற்றிவருகிறுர்கள் என்பதும், சவுதி அரேபியாவில் நகரசுத்திகரிப்பு வேலையில் ஆயிரக்கணக்கில் இலங்கையர்கள் பணியாற்றுகிறுர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.


தினசரி பஸ்சேவை

06-09-87 முதல் ஆரம்பமாகின்றது.

யாழ். ——> திருமலை

திருமலை ——> யாழ்.

காலை 5-30 மணிக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து
புறப்படும்.

உங்கள் பயணம் சௌகரியமாயிருப்பதற்கு

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

ஆசனங்கள் பதிவுசெய்யும் இடங்கள்;

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
[எ-2143]

R. B. புக்கிங் சென்ரர்.
2ம் கட்டிடம்,
மொடேன் மாக்கற்,
யாழ்ப்பாணம்.



சங்குமார்க் எவர்சில்வர் பாத்திரங்கள்

துர்க்கையம்மன் ஆலய திருவிழாவை முன்னிட்டு

மிக மலிவு விலையில்!

இன்றே நாடுங்கள்:

செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்

118, கே கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

[கடைத் தெருபிள்ளையார் கோயில்முன்பாக]

ஏ-2149



ஆரம்பமாகிவிட்டது!

88 DAY CLASS பிரிவு I

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)

திங்கள் — > வெள்ளி (8.30–12.30)

New Master Institute

B. M. C. Lane, Jaffna. (ஏ2152)



மருந்துக்கடை

சுந்தரம் பிரதர்ஸ்

சித்த ஆயுள்வேத மருந்துகள் மருந்துச் சரக்குகள்
கோவில் அபிசேகத் திரவியங்கள்

விற்பனையாளர்

மீண்டும் பஸ்நிலையத்துக்கு
அண்மையில்

யாழ்ப்பாணம்,
175, மின்சாரநிலைய வீதியில்.

ஏ-2160

### மணிவாக்கு

நடுவு நின்ருர் சிலர் ஞானிகளாவர்
நடுவு நின்ருர் சிலர் தேவருமாவர்
நடுவு நின்ருர் சிலர் நம்பனுமாவர்
நடுவு நின்ருரொடு நானும் நின்றேனே.

— திருமந்திரம்

## நமது நோக்கு

# எஞ்சிய விடயங்கள்?

## அஞ்சப்படும் விடயங்களே அவசியம்

'தாலி கட்டிப் பூதாக்கலம் பண்ணிஞலும், தம்பதிகள் நிம்மதியாக வாழ்வது கடினம்'. கிராமங்களில் இது ஒருவிதமான பரிபாஷை. யார் சொன்னதென்ற கேள்வி எழுந்தால் எழுத்திலன்று நடைபெற்றதைப் பார்க்கவில்லையா? என்ற விஞவே விடையாகலாம்.

உலகம் போற்றும் இந்த உத்தம இந்திய - இலங்கை ஒப்பந்தம் இந்த ஊரில், நாட்டில் மட்டுமல்ல வேறு நாடுகளிலும் சந்தேகத்தைக் கிளப்பியிருக்கின்றது.

பல்வேறு காரணங்கள்: அரசியலில் உண்டான தலைமைப்போட்டி, வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டி, தனிப்பட்ட வயிற்றெரிச்சல்கூட இத்தகைய குழப்பங்களுக்கு இடமளிக்கின்றன.

போர் நிறுத்தம் ஏற்படுத்திய அமைதியை நாமனைவரும் பூரணமாக வரவேற்கின்ருேம். யாழ்தேவி, மெயில் போன்ற கலகலப்பும், குளிரூட்டிய கொழும்பு பஸ்ஸின் குதூகலமும் தற்காலிகமான தோற்றமளிக்கின்றன.

அடிமைத் தனத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கில் உயிர்களைப் பலிகொடுத்தபின், 'பொடியன்க'ளின் ஆயுத ஒப்படைப்பைத் தொடர்ந்து என்ன நடைபெறும்?

நியாயமான சுயாட்சித் திட்டம், வடக்கிலும் கிழக்கிலும் அமுலாகுமென்பதே நம்பிக்கை! நம்பிக்கை மோசம் போவதில்லையா என்ற குதர்க்கத்துக்கு நிச்சயம் இடமுண்டு.

அந்த அவலநிலை ஏற்படுமாஞல் இதுகாறும் இலங்கைஅரசை குறிப்பாக அதன் பாதுகாப்பு அமைச்சரை ஆட்டிவைத்த இளைஞர் ஆயுதப்போர் மறுபிறப்பெடுக்க முடியுமா? அரசியல் தந்திரம் ஈடுகொடுக்குமா?

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களில் உயிரிழந்த இரண்டு ஆன்மாக்கள் சாந்தியடை வதற்கும், ஜனுதிபதி, பிரதம, அமைச்சர்கள், குறிபபாக பாதுகாப்பு அமைச்சர் லலித், ஏனைய பாராளுமன்ற அங்கத்தவர்கள் உயிர்தப்பியதற்கும் இறைவனை இறஞ்சுகின்ருேம்.

நாம்எழுப்பும் பாரதூரமான கேள்விக்கும்இதற்கும் எவ்வித தொடர்புமில்லை. தமிழ் மக்களும், அவர்களுக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்த போராளிகளும் குண்டிஞலும் ஹெலியிஞலும் எத்துணை கொடுமைகள் அனுபவித்திருப்பார்களென்பதை இன்று நிபுண சிகிச்சை பெறும் அமைச்சர் லலித் நேரடியாக உணரும் வாய்ப்புண்டு.

இவ்விதபோர் மறுதலிக்காது பார்க்கும் பொறுப்பு தமிழர்களைப் பொறுத்த மட்டில் இலங்கையரசிலல்ல இந்திய அரசில் தங்கி உள்ளது.

இந்திய அரசு தமிழர் சார்பில் கைச்சாத்திட்ட திட்டம் இதுவென்பதே 'எழுத்தின்' பிடி!

இன்றுபுதுடில்லியில் நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சு, உண்மையில் இரண்டாம் தரமானதே.

ஒப்பந்தத்தின் உயிர் கொழும்பில் நடைபெற்ற முதற் கூட்டத்தில் இந்திய அதிகாரிகள் சமர்ப்பித்த நகல்வரைவில்தான் இருக்கிறது.

"எஞ்சிய விடயங்கள்" முக்கிய விடயங்களை மூலைக்குள் தள்ளிவிடுவது பற்றி இந்திய அரசும் தமிழ் மக்களின்சார்பில் பங்குபற்றும் பிரதிநிதிகள் அனைவரும் விழிப்பாகஇருக்கவேண்டும்.

தெரிந்தோ தெரியாமலோ முக்கிய அம்சங்களில் இந்திய அரசு விட்டுக் கொடுக்க நேரிட்டால்? இன்று நாடிருக்கும் நிலையில் அது தமிழ் மக்கள் வரலாற்றில் ஒரு சகாப்த முடிவென்று கொள்வது தவரு?

பாரதி சிங்களத்தீவுக்கு பாலம் அமைக்க சொன்னது ஏன்? புலவனின் அந்தரங்க கருத்தை அளவிடுவது சிலவேளைகளில் அபாயம். ஆஞல் தமிழ்மக்கள் சிங்களத்தீவில் அடிமைகளாக வாழ்வதற்கல்ல என்பது திடமான, தெளிவான விளக்கம்

தமிழருக்கு இந்த நாட்டில் கிடைக்க விருப்பது பூரண மாநில ஆட்சியா அல்லது ஒரு மாநகர ஆட்சி போன்றதா? இதற்குக் கிடைக்கும் பதில் 'எஞ்சியவிடய'த்தில்காணப்படாது. பலரால் அஞ்சப்படும் விடயம் இது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்திய போர் முடிவு கற்பனைக்கெட்டாத அற்புதம்; ஆஞல் அது கெட்டிக்காரன் புளுகு போல இருக்கலாகாது.

பரவலாக்கும் அதிகாரங்களின் தரம் எத்தகையது? அளவு எவ்வளவு? மக்கள் பிரதிநிதிகளுக்கு சுயாட்க்குரிய அதிகாரம் செயற்படும் முறையில் உண்டா? நிலத்தை நிர்வகிக்க, வரிவிதிக்க, சட்டம் ஒழுங்கை நிர்ணயிக்க,மாநிலப் பாதுகாப்புக்குரிய காவற்படையைநியமிக்க,உயர்நீதிமன்றம் நடத்த, கல்வி தொழில் போன்றதுறைகளை நிர்வகிக்க, பகிரங்க சேவை அமைக்க - சுருங்கச் சொல்லின் உண்மையான சுயாட்சிக்குரிதான அதிகாரங்கள் வழங்கப்படுமா?

இவற்றில் நியாயமான முடிவு கிடைப்பதற்கு இந்திய அரசு பிடிவாதமாக இருக்கவேண்டும். புலிகளோ பசுக்களோ எந்த 'விலங்கினங்கள்' பங்குபற்றிஞலும் முடிவு ஏமாற்றத்தில் முடியக் கூடாது.

# "நம பார்வதீ பதயே"

"நம பார்வதீபதயே— ஹர ஹர மஹா தேவா"

பார்வதியின் பதியாக இருப்பதால் மஹா தேவனுக்கு விசேஷம். சக்தியில்லாமல் சிவன் இயங்கமுடியாது சக்தியும்- சிவனும் சொல்லும் பொருளும்போல் இணைந்தவர்கள். இதைத்தான் காளிதாச மகாகவி வாகர்த்தா விவ ஸம்ப்ருக்தெள வாகர்த்த பரதிபத்தயே"ஜகதப்பிதரென வந்தே பார்வதி பரமேச்வரெள" என்ருர். இந்த உலகுக்கு தாய் தநதை பார்வதியும் பரவமேச்வரனும்.

சிவனும் சக்தியும் சேர்ந்து இயங்குவதைத்தான் அர்த்த நாரீசுவரஸ்வரூபம் காட்டுகிறது. சக்தியின் இயக்கம் தான் சிவனின் இயக்கம். பார்வதி பல உருவங்களாகக் காட்சியளித்து வெவ்வேறு காரியங்களைச் சாதிக்கிருள்.

உமையாக அவதரித்து தவம் செய்து சிவனை மணம் புரிந்து கொண்டாள். துர்க்கையாக அவதரித்து மகிஷனைக் கொன்ருள்.

பார்வதியே கார்த்யாயினி. இந்தப் பெயரில் கன்னியாக இருந்து அவள் உலகை ரட்சிக்கிருள்.

பார்வதிக்கு ம்ருதானி என்ற பெயரும் உண்டு. அந்த உருவத்தில் அவள் கணபதியையும் முருகனையும் பெற்றெடுத்தாள். இந்த அன்னை கருவுருமலே பிள்ளைகளைப் பெற்றவள்.

பர்வதராஜனின் மகளானதால் பார்வதி என்று பெயர். பார்வதி உமா என்பவை சிவனைத் திருமணம் செதுகொள்வதன் முன்பு அவளுடைய திருநாமங்கள். திருமணத்துக்குப் பின் அவள் ம்ருதானி என்றும், அம்பிகை என்றும் அறியப்படுகிருள்.

பார்வதி அழிக்கும் கடவுளான சிவனின் தேவி, அழிப்பதற்கு பொருள் என்று ஒன்று இருக்க வேண்டும். பார்வதி அந்தப் பொருளை ப்ரக்ருதியை [இயற்கையைக்] குறிக்கிருள்

பார்வதியை அன்னபூரணியாகவும் கருதுகிருேம். அன்னபூரணி வயிற்றுக்கு உணவை அளிப்பவள் மட்டுமல்ல. ஐம்புல நுகர்வுக்கான செல்வங்கள் அனைத்தையும் அளிப்பவள் அன்னபிக்ஷை மட்டுமல்ல, ஞானபிக்ஷை போடுவதும் அவளே. திருஞான சம்பந்தருக்கு வயிற்றையும் நிரப்பி ஞானத்தையும் அளித்தவளாயிற்றே அவள். உமாச்சியைக் கும்பிடு என்று குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள். உமா மகேசுவரன் என்பதன் திரிபுதான் அது. உமையோடு சோந்த மகேசனுக்கு சிறப்பு. உமையே முதல் தெய்வம் அவளை கும்பிட்டால் சக்தி பெருகும். காரியம் ஜெயிக்கும் எல்லா நலனும் உண்டாகும்

பார்வதியே துர்க்கை மனிதனுக்குள் இருக்கிற மகிஷாசுரனை அழிக்கிருள், அவனுள் இருக்கிற துர்குணங்களை நிர்மூலமாக்குகிருள்.

அந்த நாரீசுவர ஸ்வரூபத்தை பற்றிக் காஞ்சிப் பெரியவர் அற்புதமாக ஓர் இடத்தில் விளக்கம் சொல்லியிருக்கிருர். அர்த்த நாரீசுவரக் கோலத்தைப் பார்க்கிறபோது பிறப்புக்குக் காரணமான காமனைத் தகனம் செய்த நெற்றிக் கண்ணில் பாதி சம்பந்தம் அம்பாளுக்கு இருக்கிறது இறப்புக்குக் காரணமான காலனை உதைத்து ஸம்ஹாரம் பண்ணின இடது காலோ முழுக்கவும் அவளுடையதாக இருக்கிறது. இதிலிருந்து ஜனன மரணச் சூழலிலிருந்து ஜீவனை விடுவிக்கிறவள் அவள் தான் என்று தெரிகிறது.

இந்த உலகத்துக்கே தாயாக விளங்குகிற பார்வதியை மீனுட்சியாகவும் காமாட்சியாகவும், விலாட்சியாகவும் காணலாம்.

ஓர் அன்னைக்கு உண்டான பரிவோடும் அன்போடும் நம்மைக் காக்கிருள். ஆஞல் அதேபோல் ஓர் அன்னையிடம் இருக்கும் கண்டிப்புடன் நம்மில் காணும் தீமைகளை அடக்கி ஒடுக்கிருள். பரிபூரண ஞானம்பெற பார்வதி கடாட்சம் மிகவும் அவசியம்.

தொகுப்பு:
செ. இரத்தினசபாபதி.

## மக்கள் கருத்து

### எங்களுக்கும் நிவாரணம் வேண்டாமா?

நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும், புனர்வாழ்வும் வழங்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் இவ்வேளையில் சமூகத்தின் ஓர் அங்கமாகிய, பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும், 'ஷெல்' குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் தமது கடமையிலே கண்ணுயிருந்து சேவையாற்றியவர்கள் அரசாங்க ஊழியர்கள் என்பதைக் கூறத்தேவையில்லை.

1983–ம் ஆண்டு ஆடிக்கலவரத்தின்போதும், பின்னர் ஏற்பட்ட அநர்த்தங்களின் போதும் காலத்துக்குக்காலம் அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணமாக அவர்களுடைய இரண்டு வருடச்சம்பளம், மூன்று மாதச் சம்பளம் போன்றவை வட்டியுடனும், வட்டியில்லாமலும் கடனுக வழங்கப்பட்டன. பாதிப்புற்ற அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் கணிசமானதொகை இக்கடன்களுக்குக் கழிக்கப்படுவதால் அவர்கள் தமது மாதாந்த பட்ஜெட்டைச் சரிக்கட்ட மேலும் கடஞளியாகியுள்ளனர்.

நிவாரணங்கள் வழங்கப்படும் இவ்வேளையில் நிதியமைச்சர் யாழ்ப்பாணம் வந்து சேதங்களைப் பார்வையிட விருப்பதால், உரியவர்கள் இது விடயத்தில் தலையிட்டு அரச ஊழியர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு ஈடு செய்யக்கொடுக்கப்பட்ட இக்கடன்களை மென்மேலும் அவர்களது சம்பளத்திலிருந்து கழிப்பதை ரத்துச் செய்து அவர்களுக்கு நிவாரணத்தை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்கும்படி பாதிக்கப்பட்ட ஊழியர்கள் என்ற முறையில் கேட்டுக் கொள்கின்ருேம்.

சி கதிர்காமன்,
[உள்நாட்டிறைவரித் திணைக்கள ஊழியர்கள் சார்பில்]
யாழ்ப்பாணம்.

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணுர்பண்ணை - மேற்கு காட்டுததுறை அம்பலவாண விநாயகப்பெருமானின் அலங்கார உற்சவம் கடந்தமுதலாம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 9 நாட்கள் இவ்விழா நடைபெற்று இறுதி நாளாகிய எதிர்வரும் வியாழக்கிழமை பகல் அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் இரவு விசேட உற்சவமும் நடைபெறும்.

## தலங்காவற் பிள்ளையார் மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் இவ்வருட உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறுகிறது.

நாளை சனிக்கிழமை சப்பறம். மறுநாள் தேர், திங்கட்கிழமை தீர்த்தம் நடைபெற்று செவ்வாய்க்கிழமை பிராயச்சித்தத்துடன் உற்சவம் பூர்த்தியடைகிறது.

## மீண்டும் பழைய இடத்தில் ஆஸ்பத்திரி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் இலவச ஆயுள்வேத வைத்தியசாலை மீண்டும் யாழ்.மாநகர சபையின்சாரநிலையக்கட்டிடத்தில் இயங்குகின்றது.

அசம்பாவிதங்களை அடுத்து சில காலமாக இந்த ஆஸ்பத்திரி நல்லூரில் இயங்கிவந்தது தெரிந்ததே.

(இன்று தெல்லி துர்க்காம்பிகை தேர்த் திருவிழா)

## அன்னை துர்க்காம்பிகை அருட்தேருலா

பல் வளனும் பல்கிமிளிர் யாழ்.நல் நாட்டில்
பண்டிருந்து தொண்டரடி பரவி ஏத்தும்
தெல்லிநகர் செழித்தோங்க அருள்கொளிக்கும்
தேவி துர்க்கை அம்பிகையின் தேரைப் பாரீர்
முல்லை அல்லி கமலம் பல் ஆரஞ் சேர
முது நெறியா மாகத்தின் விதிகள் சார
செல்வரிய ஓவியங்கள் சிற்பமாகி
சோபை மிகு கைவண்ணக் கருவூலகங்கள்
எல்லையறு திருவுருக்கள் யாவுஞ்சேர
எழில் மணியின் இன்னேசை வானை எட்ட
வல்வினைகள் தீர்க்கவருமடியார் கூட்டம்
வான் பிளக்கத் தோத்திரங்கள் மகிழ்ந்து பாட
எல் திசைக்காவர்கள் இமையோர் கூட்டம்
ஏத்தரிய சிவகணங்கள் எழுந்து ஆர்ப்ப
வல்லமை கொள் மணிவண்ண இரதந்தன்னில்
வடிவாம்பிகை துர்க்கை பவனி பாரீர்.

—சு. நா. கந்தையா.

## ஓடிவந்து காணுவீர் உய்ய

திருவளர் தெல்லியிற் சேர்துக்கா தேவி
விரம்புபதின் ஞென்ரும் விழாவில் அருள்செய்ய
நாடியே தேரில் நயந்து வருகோலம்
ஓடிவந்து காணுவீர் உய்ய.
தேரதனை நீங்கியே தெய்வீக கானமுடன்
பாரதிற்பூ மாரி பரக்கவே-தாரசைய
ஆடிவரு கோலமது அன்பர் மனத்தகலா
ஓடிவந்து காணுவீர் உய்ய.

—வ. குகசர்மா

# துர்க்கை அம்பாள் இன்று தேர்ப்பவனி

யாவருக்கும் அன்னையாக வீற்றிருந்து அருள் சுரக்கும் மகாசக்தியான துர்க்காதேவி- இன்று மக்களது உள்ளம் பொங்க,கண்ணெல்லாம் களிப்புற அலங்காரத் தேரில் அமர்ந்து பவனி வருகின்றுள். வாழ்வில் கண்டு களிக்கக் கூடிய காட்சிகளில் இது மனதுக்கு சாந்தியை அள்ளித் தரக்கூடியதாகும்.

தேவஸ்தானதிருமுறைமடத்தில் யாழ்.குடாட்டிலுள்ள சங்கீத வல்லுநர்கள் வருகை வந்து காணமழை பொழிகிருர்கள்.

வேறு ஒரு பாங்கரில் தங்கள தங்கள் குறைகளை தாயிடம் கூறி விம்மி விம்மி அழுது நிற்பவர்கள் பல்லாயிரவர். பாற்காவடி, தூக்குக்காவடி, பறவைக் காவடி கொண்டு நங்கள் விரதங்களை பூர்த்தி செய்பவர்கள் பலர். கற்பூரச்சட்டியுடன் வீதிவலம் வருபவர் பலர். அடிஅழிப்பவர்கள், அங்கப் பிரதட்சனம் செய்பவர்கள். இவர்களுக்கு இடர் விளையாமல் பாதுகாக்கும் தொண்டுபார்ப்பவர்களை மெய்சிலிர்க்க வைக்கும்.

அடியார்களுக்கு அமுதளிக்க அமுதசுரபி,அனுதைர்குழந்தைகளுக்கு, உறை, ஊண், உடுப்பு வசதி அந்தணச்சிருர்கள் வேத பாராயணம் செய்வதற்குரிய வசதிகள், இசைக்கல்வி கற்க வசதி - எனப் பல இவ்வாலயத்தில் உண்டு.

இத்தனை சிறப்புகளுக்கும் உயிர்நாடியாக விளங்கும்- துர்க்க துரந்தரி அம்மையாரின் திடமான கட்டுப்பாடான பணி எவராலும் பாராட்டத் தக்கது.

தேவஸ்தானத்தில் நடாத்தப்படும் பஜனை மணி கணக்காக தமக்கே உரித்தான தங்கக் குரலில் இசைக்க அதனைப் பின்பற்றி ஆயிரம் நாவுடைய ஆதிசேடனும் விபரிக்க இயலாது. ''பேசாத நாளெல்லாம் பிறவாநாளே'' என்ற பொருள் பொதிந்த வாக்கியத்துக்கமைய - இறை நாமம் இவ்வாலயத்திலும், ஆலயக் சூழலிலும் காற்றில் மிதந்த வண்ணமாக இருக்கும். இறை இன்பம் தனி இன்பம். ஈழவள நாட்டுக்கோர் அணி விளக்காக அமைந்த தேவஸ்தானம் சைவத்தை வளர்க்கவே அமைந்ததெனலாம்.

ம சி. சிதம்பரப்பிள்ளை

## வீரமாகாளி அம்மன் மணிக்கோபுரம்

[யாழ்ப்பாணப்]

வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில் கோபுரத் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி, மணிக்கோபுர வேலைகள் பூர்த்தியடைந்து, ஆலயத்தின் கோபுரத்தில் மணிநாதம் இப்பொழுது ஒலிக்கிறது.

மணிக்கோபுர வேலைகள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று ஆலயபரிபாலன சபையின் தீர்மானத்திற்கிணங்க இன்று வெள்ளிக்கிழமை பகல் ஒரு மணி 15நிமிடத்தில் வரும் சுபநேரத்தில் வேதாகம முறைப்படி கிரிகைகள்நடாத்தி இரண்டாவது மணிக்கோபுரத்தின் அத்திவாரக்கல் நாட்டப்படும்.

## வாக்காளர்

[1-ம் பக்கத் தொடச்சி]

தெரியவந்துள்ளது.

இச்செயலுக்கு சிலர் உடந்தையாக இருந்ததாகவும் இதைப்பற்றி சில பொதுஸ்தாபனங்கள் கண்டனம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கடைசி நேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

சுத்தமான (Purecurd)பொம்மனேறியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். இராசேந்திரம். நியூ பாமசி அருகில் ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்

(சி 0864)

### தவறிவிட்டது

எனது 581261780 V இலக்கமுள்ள தேசிய அடையாள அட்டை யாழ்நகர் - கொடிகாமம் (கோப்பாய் ஊடாக) வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தருமலிங்கம் கருணுநிதி இல: 49, பிறவுண் வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் விலாசத்தில்தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (சி 2174)

## மூதூர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாக கண்மப்பதுடன் கொலைகாரரை இனம்காட்ட முழு முயற்சி எடுத்துவருகின்றேம என்றும் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும் நோக்குடன் செய்யப்பட்ட இப்படுகொலையின் உண்மைநோக்கினை தமிழ்மக்கள் இனம்காணவேண்டும் என்றும் தமிழ்-முஸ்லிம் மக்கள் இச்சதிவலைகளுள் வீழ்ந்துவிடவேண்டாமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஈழ தே. ஐ. மி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரைக்கொண்டஇக்குழு நேற்று இந்திய அமைதிப் படையின் இராணுவ விமானமூலம் சென்றது.

இவர்கள் தமிழ்நாட்டில் அமைச்சர் பண்டிருட்டி ராமச்சந்திரனையும், புதுடில்லியில் வெளியுறவுச்செயலாளர் திரு கே.பி எஸ் மேனன், திரு குல்தீப் சகாதேவ் ஆகியோரையும் சந்திப்பார்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்திப் பணிகள் குறித்தும் இக்குழு இந்தியாவில் பேச்சு நடத்துமென்றும் மேற்படி முன்னணி தெரிவித்துள்ளது.

## இலவச விஞ்ஞான வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இஸ்லாமிய மறுமலர்ச்சிஇயக்கத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச க. பொ. த (உயர்தர) விஞ்ஞான வகுப்புகள் இன்று முதல் யாழ் மீரானியா அரபிக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜனுப் நலிம் ஹாஜியாரின் முயற்சியால் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் இலங்கையில் சகல மாவட்டங்களிலும் முஸ்லிம்கள் மத்தியில் மேற்படி விஞ்ஞான கல்வியை ஊக்குவிக்கும் வகையில் இலவச வகுப்புகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (எ)

## வலிகுடா

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டனர்.

கடந்த ஒரு வாரத்தில் வலிகுடாவில் இடம்பெற்ற ஏவுகணை, விமான தாக்குதல்களில இதுவேமிகமோசமானதாகும் இதுவரை பதினைந்திற்கும் மேற்பட்ட கப்பல்கள் இப்பகுதியில் தாக்குதலுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதையடுத்து திருமலைக்கு செல்லவுள்ள இவர், இலங்கையிலிருந்து புறப்படும் முன்னர், கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் இல்லத்தில் செய்தியாளர்களையும் சந்திப்பார், [எ]

## 17,000

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய எல்லைப்புற நிலையங்களான ஐம்மு காஷ்மீர், லடாக் ஆகிய இடங்களில் கடமையாற்றிய படையினரும் இங்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட இந்திய படையினரை பலாலியில் இறக்கு,வது இந்தியாவிலுள்ள படை தலைமைக்காரியாலயங்களுடன் தகவல் இணைப்புகளை ஏற்படுத்துவது என்பவற்றுக்கே இந்திய விமானப்படை காப்டன் எஸ். எஸ் ஹசன் நக்வி, ஜம்முவிலுள்ள விமானப்படை முகாமிலிருந்து இங்கு அனுப்பப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்தியப்படையினர் இங்கு வந்த ஒரு சில வாரங்களிலேயே இரண்டு லட்சம் கிலோவுக்கு மதிகமான ராணுவப்பொருள்களை இலங்கைக்கு இந்திய கப்பல்களும், விமானங்களும் கொண்டுவந்து இறக்கினவாம்.


**அம்பிகை அடியார்களே!**

துர்க்கை அம்மன் கோவில் முன் வாசலில்
அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில்

**அண்ணு கோப்பியை**

அரைத்துப் பெற்றுக்கொள்வதோடு

**இறும் பொருள்கள்,**
**துர்க்கையம்மன் படம் (ஸ்ரிக்கர்)**

ஆகியவற்றையும்
இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**அண்ணு தொழிலகம்,**
**இணுவில்.**

கிளை:- நவீன சந்தை,
இல. 4, யாழ்ப்பாணம்.

[ஏ-2175]


# விளையாட்டு வினையானது பாலகன் கருகி மரணம்

[கிளிநொச்சி]

குடிசை வீட்டுக்கு விளையாட்டாக தீவைத்து கொழுத்திய நான்கு வயது நிரம்பிய பாலகன் தீயில் கருகி மாண்ட சம்பவம் குஞ்சுப்பரந்தனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பிரஸ்தாப வீடும் வீட்டிற்கு அருகிலிருந்த மற்றும் ஒரு குடிசையும் முற்ருக தீப்பற்றி சேதமடைந்தன.

மரணமான 12பாலகனை காப்பாற்றப்போன அவரது 2வயது நிரம்பிய சகோதரர் படுகாயத்தை தழுவி கிளிநொச்சி ஆஸ்பத்திரியில சிகிச்சை பெற்றுவருகிருர். மரணமானவர் கிருஷ்ணபிள்ளை மகேஸ்வரன் (4 வயது) என்பவராவார்.

மரணவிசாரணையை கிளிநொச்சிப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி கே. வி. கே. திருலோகமூர்த்தி மேற்கொண்டார்.

# வளலாயில் நவீன வீடமைப்புத் திட்டம்

[யாழ்ப்பாணம்]

வளலாயில் நோர்வே-இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கங்களின் அனுசரணையுடன் வளலாய் புனர்வாழ்வுச் சங்கம் 114 வீடுகளைக்கொண்ட நவீன வீடமைப்புத்திட்டமொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

கடந்தஇருமாதங்களில் வளலாயில் இராணுவ முகாம் அமைந்திருந்தபகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினுல் பல வீடுகள் புல்டோசர்கொண்டும் தீயிட்டும் நாசமாக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

மழை காலத்தை முன்னிட்டு இவர்களுக்கு தற்காலிக உறைவிடம் அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. (கு)

## ரெலோ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:-

நேற்றுக்காலை 11-30மணியளவில் மூன்ரும்பிட்டி என்னுமிடத்தில் ஒருஜீப் ஒருஹண்டர் சகிதம் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகள் மீது 'ரெலோ' உறுப்பினர்கள் துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர். இதைத்தொடர்ந்து இந்திய அமைதிகாக்கும் படையினருடன் எமது வீரர்கள் அப்பகுதியால் வந்துகொண்டிருக்கையில் 'ரெலோ' இயக்கத்தினர் இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு எதிராகவே பெருந்தாக்குதலைமேற்கொண்டனர். ரொக்கட் லோஞ்சர் போன்ற பல கனரக ஆயுதங்களை 'ரெலோ இயக்கத்தினர் இச்சந்தர்ப்பத்தில் பாவித்தனர்.

## அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிலிருக்கும் கைதிகளின் விபரங்களை இன்று மாலைக்குள் தமக்குத் தந்துதவுமாறு மேற்படி குழு கோரிக்கை விடுத்துள்ளது.

## முஸ்லிம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர்.

சிறிலங்கா பொலிஸ் நிலையத்திலிருந்து 500 யார் தூரத்திற்குள் உள்ள இவ்வீடு எரிக்கப்பட்டதையடுத்து பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்ற முஸ்லிம் மக்கள் ஆயுதம் தாங்கிய பொலிஸாரினுல் வழி மறிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டதாகவும் இதுபற்றி இந்திய சமாதானப் படைக்கு முறையிட்ட போது அவர்களும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் இம்மக்கள் முறையிட்டுள்ளனர்.

## பன்றி பிரிச்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''எதிரியுடன் போராடி வீரமரணமடைந்துகொண்டிருந்த எமது தோழர்கள், இவ்வாறு உயிரை இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

''தற்காலிக அமைதியைப் பயன்படுத்தி சில சமூகவிரோத சக்திகள் மீண்டும் இம்மண்ணில் புகுந்துள்ளன. இக்குழுக்கள் முன்புசமூகவிரோதசெயற்பாடுகளில் ஈடுபட்டதாலே எம்மால் தடைசெய்யப்பட்டன. இவர்கள் மீண்டும் ஆயுதங்களுடன் எமது மண்ணிற்கு வந்து சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிருர்கள்.''

## சங்கத்தலைவர் ராஜிஞமா

[ஊர்காவற்றுறை]

ஊர்கர்வற்றுறை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு மு. சண்முகநாதன் தமது பதவியை ராஜிஞமாச் செய்துள்ளார்.

மேற்படி சங்கத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் லட்சக்கணக்கானரூபாமோசடியை அடுத்தே இவர் தமது பதவியை ராஜிஞமாச் செய்துள்ளார் எனததெரிகிறது.

## 2-ம் கட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இரண்டாவது நாளாக இந்திய, இலங்கை அதிகாரிகள் குழுக்களிடையே சுமுகமாக நடைபெற்றது இதன் பின்னரே இந்திய குழுவினர் தமிழர் தரப்பினரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

இரண்டாம்கட்ட பேச்சுக்கள் இன்றுடன் முடிவடையுமென்றும், 1ம், 2ம் கட்ட பேச்சுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்த முடிவுகள் மூன்ரும் கட்ட இறுதிப்பேச்சுக்கள் கொழும்பில் அடுத்த சில வாரங்களில் நடைபெறும் போது மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# இந்திய உப ஜனதிபதி பதவியேற்ருர்

(புதுடில்லி)

இந்திய உபஜனதிபதியாக முன்னுள் மஹாராஷ்டி மாநில கவர்னர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா நேற்று ஜனதிபதி மாளிகையில் ஜனதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் முன்னிலையில் பதவியேற்ருர். ஆடம்பரமற்ற முறையில் இவ் வைபவம் நடைபெற்றது.

பிரதமர் ராஜீவ் காந்தி, எதிர்க்கட்சித் தலைவர்கள் மாநில முதல்வர்கள் பலரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உப ஜனதிபதிக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். டாக்டர் சர்மா நேற்று முன்தினம் மஹாராஷ்டிர மாநில கவர்னர் பதவியை ராஜிஞமா செய்திருந்தார். (சி)

## இடமாற்றம்

கொழும்பு ஸ்ருடியோ
ஸ்ரான்லி வீதி

**20-08-87 முதல்**

[வெலிங்டன் சந்திக்கு வடக்கே] 55, மணிக் கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏ-2086

சலுகைக் கட்டணத்தில் குறுகிய காலத்தில்

## கம்யூட்டர் கல்வி

COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

பயிற்சிக்காலம்: 2 மாதம்

கட்டணம் 750/- மட்டும்
[பகுதி பகுதியாக செலுத்தலாம்]

சனி, ஞாயிறு 5 09-87
திங்., புதன், வெள்ளி 7-09-87

O/L படித்த இருபாலாரும் சேரலாம் சான்றிதழ் [Diploma] வழங்கப்படும்.

## Unikco Computer Centre

யாழ். ரோட் [சுதுமலைச்சந்தி] மானிப்பாய். | K K S Road [3ம் கட்டை] கொக்குவில் | சுஸாந்தி கல்விநிலையம் [23 டச்ரோட்] சாவகச்சேரி.

[சி 0821]

## BECON,

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

## A/L 88, 89

### கலை, வர்த்தகம்

### சனி, ஞாயிறு வகுப்புக்கள்

புதிய பிரிவு

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் | 1-00 |
| வர்த்தகம் | — | ரட்ணம் | 10-00 |
| அளவையியல் | — | S. S. மனோகரன் | 11-00 |
| கணக்கியல் | — | மரியதாஸ் | 12-00 |
| இந்துநாகரிகம் | — | அருள்நங்கை | 8-00 |
| தமிழ் | — | மீரா | 12-00 |

**ஆரம்பம்: 06-09-87**

ஞாயிறு மு. ப. 8-00 மணி

**A/L 88 பகல்நேர வகுப்புக்கள்**
**09-09-87 புதன் 7 மணி**
ஆரம்பமாகின்றன. (ஏ 2147)

## விநியோகிப்பாளர் தேவை

எங்கள் உற்பத்திப் பொருட்களான:

- ★ மல்டி பொன்ற் ஒட்டுப்பசை
- ★ சின்வா கப் பூட்ஸ
- ★ சின்வா றப்பர் செருப்பு
- ★ பாதணிகள்
- ★ பிளக் டொப்ஸ்
- ★ சுப்பர் கிறிப் பைசிக்கிள் டயர்கள்

போன்றவற்றை விநியோகிப்பதற்கு கீழ்க்குறிப்பிட்ட இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

- மன்னார்
- வவுனியா
- கிளிநொச்சி
- காங்கேசன்துறை
- திருகோணமலை
- மட்டக்களப்பு
- கல்முனை
- அம்பாறை
- யாழ்ப்பாணம்

மேலதிக விபரங்களுக்கு கீழ்க்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்க:

முகாமையாளர்,
விற்பனை நிர்வாகப்பகுதி,

## சின்வா கம்பனி

15, சிறிவர்த்தன றோட, தெகிவளை.
தொலைபேசி:- 717753 / 717347


## தொலைபேசி இணைப்பு வேலை

(சுண்டுக்குளி)

யாழ் செயலகத்திற்கு மேலதிக வானொலி தொலைபேசி இணைப்பு வழங்குவதற்கான வேலைகள் நடைபெறுகின்றன.

அரசாங்க அதிபர் கொழும்புடன் உடனுக்குடன் தொடர்புகொள்வதற்கு வசதியாகவே இப்புதிய தொலைபேசி இணைப்புகள் அரசினால் வழங்கப்பட்டுள்ளன.

## வடக்கு, கிழக்குக்கு பிக்குகள் செல்ல ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு பௌத்த பிக்குகள் செல் தற்கான சகல ஒழுங்குகளையும் விரைவில் மேற்கொள்ளுமாறு கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு. ஹுருளே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்படி பௌத்த பிக்குகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி. வவுனியா மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர்.

## ஜே. வி. பி உறுப்பினர் 12 பேர் கைது

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி ஜே. வி. பி) யைச் சேர்ந்த பதினேழு பேர் ரம்புக்கணையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரம்புக்கணை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இவர்களிடமிருந்து சுழல் துப்பாக்கிகள், கைக் குண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது. [ரா]

## சுழிபுரம் மோதல்: 5 வீடுகள் தீக்கிரை

[சுழிபுரம்]

சுழிபுரம் மேற்குப் பகுதியைச சேர்ந்த இரு சமுக மக்களிடையே ஏற்பட்ட மோதலில் வறுத்தோலைப்பகுதியிலுள்ள ஐந்து வீடுகள் எரிந்து பலலாயிரக கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இருத்தலடியைச் சேர்ந்த சிலர் காயங்களுக்குள்ளாகினர்.

சுழிபுரம் காளுவன் பகுதியில் ஒரே சமுகத்தைச் சேர்ந்த இரு குடும்பங்களுக்குள் தண்ணீா பங்கு விஷயமாக ஏற்பட்ட சச்சரவு நேற்று கத்தி வெட்டில் முடிந்தது.

## கொள்ளையோ கொள்ளை

(உரும்பராய்)

உரும்பராய் மருதனைமடம் வீதியிலுள்ள விவசாயி ஒருவரின் வீட்டில் நேற்றிரவு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் 'இந்தியன் ஆமி' எனக் கூறிக்கொண்டு உள்ளேபுகுந்து வீட்டிலுள்ளவர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி எண்ணாயிரத்தைநூறு ரூபா பணம் உட்பட இரண்டு சங்கிலி, தாலிக்கொடி, இருவைர மோதிரங்கள், காப்பு போன்றவற்றை கொள்ளையடித்துச் சென்றனர்.

### பலாலி வீதியில்..

கொழும்பு பஸ்ஸைப் பிடிப்பதற்கு ஊரெழுவிலிருந்து நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் வந்த பெண்ணிடம் இரண்டாயிரம் ரூபா பணமும், தாலிக்கொடியும் கோண்டாவில் பலாலி வீதியில் வைத்து துப்பாக்கி இளைஞர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது.


கலர் பிலிம் சுருள்களை இரண்டு நாட்களில்
PROCESSING & PRINTING
நவீனமுறையில் செய்து தருபவர்கள்.

## கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[5] ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர்பிலிம் சுருள் இனாம். ஏ2084

## AL 88, 89 விஞ்ஞான மாணவர்கட்கு

**தாவரவியல்:** திரு. சிவவீரசிங்கம் B Sc.
88 Batch I Tues 4 — 6 p. m
Batch II Mon 4 — 6 p. m.
89 Sat & Sun 8-30 — 9.30

**விலங்கியல்:** திரு. தம்பிராஜா B. Sc.
88 Sat & Sun 8-45 — 9-45
89 Sat & Sun 9-45 — 10-45

**இரசாயனவியல்** திரு நாகரட்ணம் B Sc.
88 Batch I Sat & Sun 7-30 — 8 30
Batch II Sat & Sun 1 -45 — 12-45
89 Batch I Sat & Sun 10-45 — 11-45
Batch II Sat & Sun 1-15 — 2-15

**தூய/பிரயோக கணிதம்**
திரு. வெக்ரர் வேலாயுதம் B Sc.
89 Sat & Sun 10-15 — 12-15

**தூய/பிரயோக கணிதம்** திரு. கணேசன் B Sc.
ஆசிரியருடைய 88, 89 ஆண்டுகளுக்கான வகுப்புக்கள் கிழமை நாட்களில் காலை/மாலை வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன.
மேலும் விபரங்களுக்கு: நேரில்

**3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**
[ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில்]

★ ★

**இரசாயனவியல்** திரு. நாகரட்ணம் B.Sc.
89 Sat & Sun — 4-00—5-00

**பௌதிகவியல்** திரு. ரவீந்திரநாதன் B Sc.
88 Tue & Wed & Fri 6-15 — 7-15
89 Thurs & Fri 4-00 — 5-00

**மணல்தரை லேன்**
கந்தர்மடம், திருநெல்வேலி.
[எ 2159]


கச்சேரி யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணம் (குருநகர்) உணவுக் களஞ்சியத்திற்கான திருத்த வேலைகள்

**புதிய களஞ்சியம்**
1. கூரை திருத்த வேலைகள்
2. இரும்புக்கதவுகளின் திருத்த வேலைகள்
3. யன்னல் திருத்த வேலைகள்

**பழைய களஞ்சியம்**
1. கூரைத் திருத்த வேலைகள்
2. கதவுகளின் திருத்த வேலைகள்

**காரியாலய அறை**
காரியாலயஅறையில் உள்ளசகல திருத்த வேலைகளும்

**வெளித்தண்ணீர்த் தொட்டி**
தண்ணீர் தொட்டித் திருத்தவேலைகளும்

**காவலாளிகளின் அறை**
சகல திருத்த வேலைகளும்

மேற்சொல்லப்பட்ட திருத்த வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. 1987ம் ஆண்டு செப்டெம்பர் பதினேராம் திகதி நண்பகல் 12 மணிவரை கீழ் குறிக்கப்படுபவரால் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இக்கேள்விப்பத்திரங்கள் மேலதிக அரசாங்க அதிபர் கச்சேரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேற் சொல்லப்பட்ட வேலைகள் சம்பந்தமான விபரங்களை எனது காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகிறேன்.

கேள்விப்பத்திரப் படிவங்களை யாழ்ப்பாணக்கச்சேரி உணவுக்கட்டுப்பாட்டுக் கிளையிலிருந்து 9-9-87ம் தேதி காலை 11-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

சி. பற்குணம்,
உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி,
யாழ்ப்பாணம்.

எ-2166

## கிளிநொச்சியில் தமிழ்ப்பொலிஸ்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் பொலிசாரின் வழமையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பொலிசார் பலர் இங்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளனர். நீதிமன்றமும் வழமைபோல் இயங்குகிறது. கிளிநொச்சி சிறைச்சாலை திருத்த வேலையும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## ஊரிக்காட்டில்

[3-ம பக்கத் தொடர்ச்சி]

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஊரிக்காடு சோடாக்கடை சுந்தரப் பெருமாள் கோயில் பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதி வெடிகளை அகற்றும் வேலைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்! (ஒ)


THE EXPRESS INSTITUTE KOPAY

A/L 89

தாவரவியல்

அலகு 4

உருவவியல்

செப். 07-ல் ஆரம்பம் (பி.ப.5-00))

ஆசிரியர்: திரு. பாலா

[எ 2167]



## வரவேற்புபசார அழைப்பு

திரு. திருமதி N. S. கந்தையாவின்

புதல்வன்

குகேந்திரனுக்கும்

திரு. திருமதி T யோகராஜாவின்

புதல்வி

மஞ்சுளாவுக்கும்

30-08-87 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்தேறிய திருமணத்தின் வரவேற்புபசார வைபவம் 04-09-87 [இன்று] பிற்பகல் 4 மணியளவில் மணமகள் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. திருமதி |
| T. யோகராஜா | C. பிரைகபாணி |
| தம்பதிகள். | தம்பதிகள். |

"சண்முகவாசா",
62/2, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

சி-0843



## முருங்கனிலிருந்து காங்கேசன்துறைக்கு களிமண் கொண்டுவருவதற்கு

## லொறிகள் தேவை

40,000 தொன் களிமண் முருங்கனிலிருந்து காங்கேசன்துறைக்கு கொண்டுவருவதற்கு 35 லொறிகள் உடனடியாகத் தேவை. முதலில்பதிவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும் 35 லொறிகளுக்கு மட்டுமே தொடர்ந்து வேலைவழங்கப்படும். லொறிகளில் ஏற்றுமதியும்இறக்குமதியும் 24 மணி நேரமும் எமது நிறுவனத்தின் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும்.

க. ஜெயபாலசிங்கம் கம்பனி,
காங்கேசன்துறை.

சி-0852



## BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக) யாழ்.

## DAY CLASS

| | |
|---|---|
| தூய / பிரயோக கணிதம் | — திரு. நல்லையா |
| பௌதிகம் | — திரு. மணியம் |
| இரசாயனவியல் | — திரு. மணியம் |
| தாவரவியல் | — திரு. பாலா |
| விலங்கியல் | — திரு. ஞானு |

ஆரம்பம் 9-9-87 புதன் 8-30

88 A/L தாவரவியல் — திரு. பாலா
தாவர இராட்சியப் பிரிவுகள் சனி, ஞாயிறு 11-30
89 A/L அலகு 4 அஞ்ஜியோஸ்பேர்ம்
சனி, ஞாயிறு 12-30
88 A/L பௌதிகம் — திரு. மணியம்
நிலைமின்னியல் சனி, ஞாயிறு 6-15 a m.
89 A/L ஒளியியல் சனி, ஞாயிறு 7-15 a. m.

ஆரம்பம் 6-9-87 (ஞாயிறு)

எ-2148


## ஜயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சுவாமி சிவானந்தாஜி மகாராஜ் அவர்களின் நூற்றாண்டு ஜயந்திவிழா எதிர்வரும் திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும நடைபெறும்.

யாழ். திவ்விய ஜீவனசங்கத்தின் ஆதரவில் நல்லூரில் உள்ள சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி), செல்வி புஷ்பாசெல்வநாயகம் ஆகியோரின் சொற்பொழிவுகளும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

2-ம் நாள் நிகழ்ச்சியில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. ந சிவராசா ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியெட்டி அழைப்பும்



திருமதி சிவநாயகம் இராசையா

மண்ணுலகு: 25-06-1918

விண்ணுலகு: 05-08-1987

அன்போடும் பண்போடும் அழகு முகங்காட்டி அனைவரையும் நீங்கள் அரவணைத்து வாழ்ந்தீர்கள், இல்லறமே நல்லறமாய் இனிதாய் அமைந்த நேரம், ஈசன் மலரடியில் இணைந்து விடப் போனதென்ன? மாயமாய் நீங்கள் மறைந்துவிட காயப்பட்ட உள்ளங்கள் கலங்கித் தவிக்குதம்மா, உடலழிந்து போனாலும் உயிருக்கு உயிராக திடமாக நின்று எங்கள் துயரங்கள் தீர்ப்பதெப்போ? உங்கள் ஆத்மா சாந்தியடைய நாங்கள் என்றும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும் அன்புக் கணவன் இராசையா, மகள் திருமதி மனோன்மணி கனகசபை, மக்கள்: துரைராசா, சிவம் (வாகன விற்பனையாளர், சித்தங்கேணி], கணேசபிள்ளை, கனகரத்தினம், இராசதுரை, தங்கராசா, மருமகள்மார்: ஞானம்பிகை, சரஸ்வதி, தவமணிதேவி, பிறேமா, பேரப்பிள்ளைகள்: சண்முகராசா அபிராமி, பிரியங்காய், மாலினி, மயூரன்.

இ. சிவம்.

'சிவபவனம்'
சிவன்கோவிலடி,
சித்தன்கேணி.

(சி 0800)


# இப்படியும் நடக்கிறது

## நேற்று.. இன்று... (நாளை?)

தேசிய அடையாள அட்டை கைவசம் வைத்திருக்காத ஏராளமான தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைதானார்கள்!

நாட்டிலுள்ள இருபதினாயிரம் புத்தபிக்குகளும் கண்டிப்பாக விசேட அடையாள அட்டை எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட பெரும் சுவரொட்டிகளில் தமிழ்த்தீவிரவாத இளைஞர்களின் (தேடுதல்) புகைப்படங்கள் காணப்பட்டன. தலைக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

பாராளுமன்றக் கட்டிடத்தில் நடைபெற்ற குண்டுவீச்சு சம்பவம் தொடர்பாக தகவல் தருவோருக்கு பத்துலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் இராணுவ வேட்டை. தமிழ் இளைஞர்கள் தலைமறைவு.

சிங்களத் தீவிரவாத இளைஞர்கள் மீது பொலிஸார் வலை வீச்சு. பல நூற்றுக்கணக்கான தென் பகுதி சிங்கள இளைஞர்கள் காடுகளில் தலை மறைவு.

பஸ், மினிபஸ் பிரயாணிகள் சோதனையிடப்பட்ட போது ..... "தெமிழ கட்டிய ஒக்கம பஹின்ர ..." (தமிழ் ஆட்கள் எல்லோரும் இறங்கு)

..."சிங்கள கட்டிய ஒக்கம பஹின்ர ..."

இராணுவ தடுப்பு முகாம்களிலும் சிறைகளிலும் உள்ள தீவிரவாத தமிழ் இளைஞர்கள் மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றனர்.

தென்பகுதியில் ஏராளமான சிங்கள தீவிரவாதஇளைஞர்கள் கைதாகி தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவ்வளவு தகவலும் போதுமா? இன்னும் தேவையா?

—ஊடுருவி

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி; 19 [1987-09-04]
கிழமை: வெள்ளி
திதி: ஏகாதசி மு. ப. வரை
நக்ஷத்திரம்: உத்தராடம் பி. இ. வரை.

மேடம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும் சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் கிடைக்கலாம்.

இடபம்: புத்திர வழியால் புகழுண்டு. புதிய பாதையில் தடையுண்டு. குடும்பத்தில் பிணைப்புக்கள் பலப்படும். பொதுவாகச் சுபதினம்

மிதுனம்: தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும் நண்பர்களே காலைவாரிவிடக் கூடும். சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம்

கடகம்: இன்று எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும். களவு திரவழியால் பொருள் வரவுமுண்டு

சிங்கம்: குறைகேட்க நேரிடும். கடமையில் பலதடைகள் தோன்றும். எதிரபாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு.

கன்னி: நீண்டநாள் கனவு நனவாகும். பெரியவர்களின் உதவி தாரளமாகக் கிடைக்கும். புண்ணியம் மேலிடும்.

துலாம்: பயன்தரும் பயணமொன்று மேற்கொள்ளப்படலாம் வெளியிடத்துத் தொடர்பு பெருகும். கருத்துவேற்றுமைகள் மறையும்.

விருச்சிகம்: முயற்சியால் உயர்ச்சியுண்டு. பணவிவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும் வீட்டில் சுபகருமம் இடம்பெறும்

தனுசு: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும் சிறிய தலையிடிக்கும் இடமுண்டு.

மகரம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். சிறுவிடயத்திற்குக்கூட மற்றவர்கள் குறை கூறுவார்கள். சுகாதாரத்தைப் பேணவும்.

கும்பம்; இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள்

மீனம்: நினைத்தது நடக்காது நிதியில் முடக்கமுண்டு. பூமிப்பிணக்கும் தலைகாட்டும். அதிக சிந்தனை தலையிடியைக் கொடுக்கும்.

திருமலை
வே. இரவீந்திரன்

## அபிராமி அந்தாதி இலவசம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தேர்த் திருவிழாவான இன்று கொழும்பு அகில இலங்கை சுபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தினர் நூறு பாடல்கள் அடங்கிய அபிராமி அந்தாதி கைநூல் ஒன்றை பக்தர்களுக்கு இலவசமாக விநியோகம் செய்கின்றனர்.

ஸ்ரீ சாஸ்தாபீடாதி ஸ்ரீ ஜயப்பதாஸன் தொடுத்து இந்நூலை தெல்லிப்பழையைச் சேர்ந்த கொம்பனித் தெரு ராஜன் பிரின்டர்ஸ் உரிமையாளர் திரு. கு. அருளானந்தம் அச்சிட்டு உதவியுள்ளார்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 4-9-87

## சில கூறும் கதை

[கொழும்பு]

"என்னைப் பி ா தொடர்க" என்னும் தொனிப்பொருளை விளக்கும் சிலையொன்று தியத்தலாவ இராணுவ பயிற்சிமுகாமில் தளபதி நளின் செனிவிரத்தினவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தச்சிலை தன்னைப் பின் தொடருமாறு ஒரு சிரேஷ்ட அதிகாரி கனிஷ்ட அதிகாரிக்கு கட்டளையிடும் தோறணையில் அமைந்துள்ளது. [ஒ]

மன்னார் இ. போ. சபையில்

# துப்பாக்கி முனையில் ரூ.34,000 கொள்ளை

[வவனியா]

மன்னார் இ. பே. ச. சாலையிலிருந்து 34ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் ஆயுத முனையில் இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!

சுமார் 10பேர் இந்தக்கொள்ளையில் ஈடுபட்டதாக இ போ ச. வட்டாரங்கள் கூறின.

சம்பவதினமிரவு திடீரென சாலைக்குள் புகுந்த ஆயுத கோஷ்டியினர் கணக்காளர் அறைக்குள்சென்று பணம் இருந்தபெட்டியை வெடிவைத்துத்திறந்து பணத்தை கொள்ளையடித்துச் சென்றனராம்.

இச்சம்பவத்தில் சாலையில் இரவு தங்கியிருந்த இ. போ ச. அதிகாரிகள் சிலர் கொள்ளையர்களினால் பலத்த தாக்குதலுக்கு உளளானார்கள் என்றும் புகார்செய்யப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

(பணடத்தரிப்பு)

வட பகுதி ஹோமியோபதி சங்கத்தின் கருத்தரங்கு இன்று பிற்பகல் யாழ் நாவலர் வீதியிலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

## ரூ. 6 லட்சம் நகை கொள்ளை

(ஒட்டுசுட்டான்)

திருகோணமலைப் பகுதியில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அண்மையில் நிலாவெளியைச் சேர்ந்த திருமதி வே. கனகம்மா என்பவரின் வீட்டில் ஆறுலட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

# சரவணபவானந்தனுக்கு சர்வதேச கௌரவம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் டாக்டர் நவரத்தினம் சரவணபவானந்தன் அமெரிக்காவில் நடைபெற்ற மகாநாடொன்றில் சர்வதேச விருது வழங்கிக் கொரவிக்கப்பட்டுள்ளார்.

சட்ட மருத்துவத்துறையில் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் டாக்டர் சரவணபவானந்தன் ஆற்றிய சேவைகளைக் கௌரவித்தே இவ்விருது வழங்கப்பட்டது.

அமெரிக்காவிலுள்ள விற்ரு என்னும் நகரில் நடைபெற்ற அமெரிக்க சட்ட மருத்துவ அறிஞர்களின் சர்வதேச மகாநாட்டில் இந்த விருதின் மூலம் டாக்டர் சரவணபவானந்தன் இலங்கைக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு உலக ரீதியில் பெருமை தேடித்தந்துள்ளார்.

மேற்படி மகாநாட்டில் மகாநாட்டின் செயலாளரும் சர்வதேச சட்ட மருத்துவ சஞ்சிகையின்ஆசிரியருமான டாக்டர் வில்லியம் ஜி. எக்கர்ட் டாக்டர் சரவணபவானந்தனுக்கு இவ் விருதை வழங்கினார். 10 பேருக்கு இம் மகாநாட்டில் இவ் விருதுவழங்கப்பட்டது. இவ் விருதைப் பெற்ற ஒரே ஒரு இலங்கையர் டாக்டர் சரவணபவானந்தன் ஆவார்.

## இராணுவத்தின் சிகரட் வியாபாரம்

(பலாலி

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தறபோது சிகரட் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

சுன்னாகம் பகுதிக்கு வரும் சிறிலங்கா இராணுவத்தினர் அங்குள்ள கடைகளுக்கு குறைந்தவிலையில் சிகரட் விற்கிறார்களாம்.

## யாருடையது?

திறப்புக் கோர்வையொன்றை என். பிரபாகரன் என்பவர் பழைய பூங்கா வீதி அருகில் கண்டெடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் தகுந்த அடையாளம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## மின்தடை இருக்காது

[கொழும்பு]

மின்விநியோகத்தில் தடை ஞாயிற்றுக்கிழமை இருக்கமாட்டாதென இலங்கை மின்சாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

மொனறாகலை, காசல்றி போன்ற பகுதிகளில் கணிசமானளவு மழை பெய்தமையே இச்சனை நீக்கத்திற்கு காரணமென தெரிவிக்கப்படுகிறது.

## திருமலையில் தொடரும் ஊரடங்கு

[கொழும்பு]

திருமலை மாவட்டத்தில் இன்று அதிகாலை நான்கு மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம், மீண்டும் இன்றிரவு ஏழு மணிக்கு அமுலுக்கு கொண்டுவரப்படும். (ஒ)

## பிரேமானந்த் காணவில்லை

இந்தியாவிலிருந்து அண்மையில் யாழ்ப்பாணம் வந்த வடுதலை அமைப்பொன்றைச் சேர்ந்த பிரமானந்த் என்பவர் கடந்த 29ம் திகதி முதல் காணமல் போய்விட்டதாக அறியப்படுகிறது.

சம்பவதினம் சாவகச்சேரிக்குச் சென்றவர் அடுத்த நாள் வரை வீடு திரும்பவில்லையென்றும் பல இடங்களில் தேடியும் இவரைக் காணவில்லையென்றும் இவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## சிபார்சு!

[கொழும்பு]

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் 1987ம் ஆண்டிற்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டுமென அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் பரிசுத்திட்ட தெரிவுக்குழுவிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

தீர்க்கப்படாமல் இருந்த இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இருவரும் தீவிரபங்கெடுத்தமை பற்றியும் அவர் அக்கடிதத்தில்குறிப்பிட்டுள்ளார். [க]

## ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இந்திய ராணுவம்

[பலாலி]

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நிலைகொண்டிருக்கும் இந்திய இராணுவத்தினர் தமது முகாமை பலப்படுத்திவருகின்றனர்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கட்டிடத்தில் மட்டும் முன்னர் இருந்த இராணுவத்தினர், தற்பொழுது கலாசாலைக் கட்டிடத்துக்கு அருகிலும் கூடாரம் அமைத்துள்ளனர்.

பயிற்சிக்கலாசாலை முகாமை அண்மித்த பகுதிகளில் பதுங்கு குழி போன்ற கிடங்குகள் வெட்டி அதற்குள்ளிருந்தும் காவல்புரிகின்றனர்.

## பொன்னம்மான் உருவப்படம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காலஞ்சென்ற தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் லெப்டினன்ட் கேணல் பொன்னம்மானின் (குகன்) உருவப்பட திறப்பு விழா இன்று மாலை திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் நடைபெறவுள்ளது.

உருவப்படத் திறப்பு விழாவையடுத்து யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்கள் உரைநிகழ்த்துவார்கள்.

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு தம்பு

உரும்பிராய் திருவீதி மலாயன் பென்சனியர் கார்த்திகேசு தம்பு காலமானார். அன்னார் மீனாட்சியின் அன்புக் கணவரும் அம்பிகைராஜா (பிராந்தியத் தொலைத் தொடர்பு பொறியியலாளர் யாழ்ப்பாணம்),வேலாயுதபிள்ளை (பிரதம பொறியியலாளர் மின்சார சபை கொழும்பு) ஆகியோரின் தகப்பனாரும், விமலாதேவி, பொன்மயிலாம்பிகை ஆகியோரின் மாமனாரும், யசோதரன், சுபோதினி, மீனாகுமாரி, பிருந்தா, நிரன்ஜலா, அனோஜன் ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் நாளை 05-09-87 சனிக்கிழமை நண்பகல் நடைபெறும்.

(சி 0875) தகவல்: த. அம்பிகைராஜா.

### திருமதி நாகம்மா பொன்னையா

திருமதி நாகம்மா பொன்னையா அவர்கள் 3-9-87 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும், Dr. மூர்த்தி அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தனலக்குமி அவர்களின் அன்பு மாமியாரும், யோகேந்திரன், திருமதி Dr. கேதீஸ்வரி சதானந்தன், திருமதி ஜெகதீஸ்வரி சிவஞானசக்திவேல் (கனடா), பாலேந்திரன் (சுவிற்ஸலன்ட்), கிருஷ்ணவேணி (உடுவில் மகளிர் கல்லூரி), திருமதி கீதா யோகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டியாரும், கவிதா, கரன், தனோபா, அனிற்ரு (கனடா) ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, இன்று காலை 9-00 மணிக்கு தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல் கொடுப்பவர்: Dr. P. S. G M. மூர்த்தி உடுவில்.

[சி-0863]

### திருமதி மகேசன் பொன்னம்மா

திருமதி மகேசன் பொன்னம்மா 03-09-1987 காலை இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற மகேசன் அவர்களின் அன்பு மனைவியும், சிவானந்தன் (இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம்-யாழ்ப்பாணம்) நித்தியானந்தன் (இலங்கை மின்சாரசபை - பலாங்கொடை), சர்வானந்தன் (மேற்கு ஜெர்மனி), இரதிதேவி, இரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும், சின்னத்தம்பி (ஆசிரியர்), சின்னத்தம்பி (நில அளவையாளர்), பார்வதி, கமலாதேவி, சாந்தி ஆகியோரின் அன்பு மாமியும், பொன்னுத்துரை, கனகம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது நெல்லியடி இல்லத்தில் நடைபெறும். தகனக் கிரியை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் கொடுப்பவர்: ம. சிவானந்தன் 'இரதிமலர் வாசா' நெல்லியடி, கரவெட்டி. (சி 0865

### செல்லப்பா சின்னையா

மட்டுவில் தெற்கு மடத்தடி சாவகச்சேரியைச் சேர்ந்த செல்லப்பா சின்னையா 3-9-87ல் காலமானார். அன்னார் தங்கமுத்துவின் அன்புக்கணவரும், துரைராசா (சா. ப நோ. கூ. ச. இ சபை உறப்பினர்), ஆறுமுகம் (ஆசிரியர்), கந்தசாமி (பயிர்ச்செய்கை உத்தியோகத்தா) அவர்களின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, அன்னம்மா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புமாமனாரும், சிறீதரன் (ஜெர்மனி), சிறீகாந்தன், சிறீபாலன், கௌரி, சீதா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 4-9-87 வெள்ளிக்கிழமை பி. ப. 3மணிக்கு மட்டுவில் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-0874) தகவல்:- கந்தசாமி C O.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் அருணாசலம்

திருமதி தங்கரத்தினம் அருணாசலம் காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும், குணாளன், தயாளன் ஆகியோரின் அன்புத் தாயாரும், செலவியின் அன்பு மாமியாரும், ஆதவன் இளங்கோ ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 4-9-87 வெளளிக்கிழமை நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைக்காக நீர்வேலி குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குணாளன், தயாளன் (மக்கள்)

(சி 0876)

### தம்பிமுத்து துரைராசா



கொழும்பு Free Lanka Stores உரிமையாளர் தம்பிமுத்து துரைராசா 02-09-87 புதன்கிழமை காலமானார் இவர் காலஞ்சென்ற தம்பிமுத்து தம்பதிகளின் புதல்வரும், கனகம்மா, பொன்மணி, பூமணி, தேவி, பாக்கியலீலாவதி, தர்மகுலராஜசிங்கம், திருஞானசம்பந்தர் (Cowry Silk Emporium பங்காளர்) ஆகியோரின் சகோதரரும், தம்மையா, ஆறுமுகம், தனபாலசிங்கம், சிவசுப்பிரமணியம், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும், சத்தியேந்திராவின் பெரியப்பாவுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-09-87 சனிக்கிழமை அளவெட்டி மகாத்மாவீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக முற்பகல் 10-00மணியளவில் காங்கேசன்துறையிலுள்ள குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(சி 0871) தகவல்: த. திருஞானசம்பந்தர்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.